
# கண்துடைப்பா ?

- தலைவர் கலைஞர்



# கண்துடைப்பா?

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வுக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் **கலைஞர்**

வெளியீடு:

**திராவிட முன்னேற்றக் கழகம்**

“அண்ணா அறிவாலயம்”
367 & 369, அண்ணா சாலை,
சென்னை – 600 018.

முதற்பதிப்பு : பிப்ரவரி 2013.

விலை : **ரூ.5/–**

அச்சிட்டோர் : **அஸ்வின் பிரிண்டிங் ஏஜென்சி,** சென்னை-14.

# கவலை போக்கும் அறிவிப்பா?
# வெறும் கண்துடைப்பா?

(கலைஞர் அறிக்கை – 10.2.2013)

ஆளுநர் உரை பற்றி நான் கருத்துத் தெரிவிக்கும் போதே,

"ஆளுநர் உரையிலே தங்களுக்கான நிவாரணத் தொகைகள் பற்றிய அறிவிப்பு வெளிவரும் என்று எதிர்பார்த்திருந்த டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு பெரும் ஏமாற்றம்தான் ஏற்பட்டுள்ளது. நிவாரணம் அரசால் விரைவில் அறிவிக்கப்படும் என்று குறிப்பிட்டிருப்பது, முதல் அமைச்சரின் பதில் உரையில் அதனை இடம்பெறச் செய்தால்தான் முதலமைச்சர் அறிவிப்பு என்று ஏடுகளில் வெளிவரும் என்பதற்காக ஆளுநருக்கு அந்த வாய்ப்பைத் தராமல் தவிர்த்திருப்பார்களோ ?" என்று நான் எழுதியதை மெய்ப்பிக்கும் வகையில், விவசாயிகளுக்காகத் தமிழக அரசின் சார்பில் செய்யப்பட்டுள்ள "ஓரளவு" அறிவிப்புகளை எல்லாம் ஆளுநர் உரையிலே வெளியிடாமல், விவசாயிகளை யெல்லாம் இத்தனை நாட்கள் வேதனையோடும்– விரக்தியோடும் காத்திருக்கச் செய்து, கடைசியில் முதலமைச்சர் தனது பதில் உரையிலே அந்த அறிவிப்புகளையெல்லாம் செய்து; அவற்றை ஏடுகளில்

கடைசியில் "சட்டசபையில் ஜெயலலிதா அறிவிப்பு" என்று கொட்டை எழுத்துக்களில் வெளியிடச் செய்து, அதைப் பார்த்துப் பரவசம் அடைந்திருக்கக்கூடும்.

ஆளுநர் உரையிலேயே அறிவிப்புகளையும், அரசின் கொள்கைகளையும் இணைத்து, அந்த உரையின் மீது அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை எவ்வித அச்சமுமின்றிச் சுதந்திரமாக எடுத்துரைத்து, அதற்கு முதல் அமைச்சர் விளக்கமளிப்பது தான் எப்போதும் கடைப்பிடிக்கப்படுகின்ற சட்டப்பேரவை நடைமுறை. ஆனால் இந்த ஆண்டு, ஆளுநர் உரையிலே அரசின் கொள்கை அறிவிப்புகளோ, திட்டங்களோ இடம் பெறவில்லை; அதன் மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த எந்த உறுப்பினரும் தங்கள் கருத்துகளைப் பேச நேரம் ஒதுக்கப்படவில்லை; அப்படி அவர்கள் பேசியிருந்தால் தானே அதற்குப் பதிலளிக்க வேண்டும்; எனவே யாருடைய பேச்சுக்கும் விளக்கமளிக்க வேண்டிய அவசியமே முதல்வருக்கு ஏற்படவில்லை; அதற்கும் மேலே, தி.மு.கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலே இருந்தால் மக்கள் நலன் கருதி, ஜனநாயக ரீதியாக எதிர்க் கேள்வி கேட்பார்களே என்பதற்காக, அவர்களையெல்லாம் முதல்நாளே கவனமாக இந்தத் தொடர் முழுவதும் அவைக்கே வரக்கூடாது என்று நீக்கிவிட்டார்கள்.

இப்படித் தேவையான அனைத்து முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளுக்குப் பிறகு முதலமைச்சர் ஜெயலலிதா, பேரவையிலே ஆளுங் கட்சியினரின் பலத்த கையொலிகளுக்கிடையே அறிவிப்புகளைச் செய்திருக்கிறார். நல்லவேளையாக முதல் அமைச்சர் இந்த அறிவிப்புகளை யெல்லாம் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது படித்த காரணத்தால், மூன்று நாட்கள் நடைபெற்ற பேரவையில் இந்த முறை "110வது விதியின் கீழ் வழக்கமாக முதலமைச்சர் படிக்கும் அறிக்கைகள்" இல்லாமல் பேரவை தப்பித்துக் கொண்டது.

குறுவைப் பயிரையும், சம்பாப் பயிரையும் இழந்து நிற்கும் விவசாயிகள் ஏக்கர் ஒன்றுக்கு முதலில் 40 ஆயிரம் ரூபாய் வீதம் நிவாரண உதவி கேட்டு, குறைந்தபட்சம் 25 ஆயிரம் ரூபாயாவது கொடுத்தே ஆகவேண்டுமென்று கோரிக்கைகளைத் தொடர்ந்து வைத்ததுடன், பல்வேறு வகையான போராட்டங்களையும் நடத்தினார்கள். தமிழகத்திலே உள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும் இந்தக் கோரிக்கையை வழிமொழிந்து, வலியுறுத்தின.

ஆனால் நிவாரணமாக என்ன அறிவிக்கப் பட்டுள்ளது? 50 சதவிகிதத்திற்கு மேல் மகசூல் பாதித்துள்ள ஒரு லட்சத்து 75 ஆயிரம் விவசாயிகளின், 3 லட்சத்து 61 ஆயிரம் ஏக்கர் பயிர்களுக்கு மட்டுமே;

ஏக்கர் ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா படித்திருக்கிறார்.

அப்படியானால், 50 சதவிகிதத்திற்குக் குறைவாக மகசூல் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கதி என்ன? 50 சதவிகிதத்திற்கு மேல் பாதிக்கப்பட்டவர்களுக்குக்கூட 15 ஆயிரம் ரூபாய் என்பது முழுவதையும் தமிழக அரசே தரப்போகின்ற நிவாரணமா? பேரிடர் நிவாரணம், வேளாண் பயிர்க் காப்பீட்டுத் தொகை ஆகியவை எல்லாம் சேர்ந்தது தானே! அப்படியானால், தமிழக அரசு நிவாரணத் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு அளிக்கப் போகின்ற தொகைதான் எவ்வளவு? தற்போது அறிவிக்கப்பட்டுள்ள இந்தத் தொகை போதவே போதாது என்று விவசாயிகள் எல்லாம் குமுறிக் கொண்டிருக்கிறார்கள். தண்ணீர் இல்லாத காரணத்தால், சாகுபடியே செய்யாமல் வாழ்வாதாரத்தை அடியோடு இழந்த பல லட்சம் விவசாயிகளுக்கு என்ன நிவாரணம் என்பதும் முதல் அமைச்சரின் அறிக்கையிலே படிக்கப்படவில்லை.

4–2–2013 அன்று உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சி.எஸ்.வைத்தியநாதன், “தமிழகத்தில் 9 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது, அதில் 3 லட்சம் ஏக்கரில்

செய்யப்பட்டுள்ள பயிர்கள் போதிய தண்ணீரின்றிக் கருகிவிட்டன; 3 லட்சம் ஏக்கர் சாகுபடி முடிவடைந்து விட்டது; மீதம் 3 லட்சம் ஏக்கர் உள்ளது" என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார். இதைத் தவிர குறுவைச் சாகுபடியில் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய டெல்டா மாவட்டங்களில் 14 லட்சம் ஏக்கரில் இந்த ஆண்டு சம்பா மட்டும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் சுமார் 4 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி செய்யப் பட்டது. இதில் தண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாக 60 சதவிகிதப் பயிர்கள் கருகிப் போய்விட்டன. இவ்வாறு உண்மைப் புள்ளி விவரம் இருக்க, முதலமைச்சர் ஜெயலலிதா ஒரு லட்சத்து 75 ஆயிரம் விவசாயிகளின் 3 லட்சத்து 61 ஆயிரம் ஏக்கருக்கு மட்டுமே நிவாரணத் தொகை வழங்க முன்வந்திருப்பது என்பது ஏதோ நாங்களும் உதவி செய்தோம் என்ற அளவில்தான் உள்ளது. கரும்பு விவசாயம் செய்த விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை பற்றி முதல்அமைச்சர் எதுவும் கூறவில்லை. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணம் என்பது பாதிக்கப்பட்ட விவசாயிகளில் பாதிப் பேருக்குக் கூடக் கிடைக்காத நிலைதான் தற்போது உள்ளது.

விவசாயத் தொழிலாளர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் நிவாரணம் அளிக்க வேண்டுமென்று நானும்

எழுதியிருந்தேன். மற்றவர்களும் கேட்டிருந்தார்கள். அதுபற்றி முதலமைச்சரின் நீண்ட அறிவிப்பில் எந்தத் தொகையும் அறிவிக்கப்படவில்லை. விவசாயிகளின் கூட்டுறவுக் கடன் முழுவதையும், டெல்டா மாவட்டங்களின் அசாதாரண நிலைமைகளைக் கருதி, ரத்து செய்திட வேண்டுமென்ற விவசாயிகளின் கோரிக்கைக்கும் எவ்வித விளக்கமும் தரப்படவில்லை.

தற்கொலை செய்து கொண்டு இறந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு பத்து இலட்சம் ரூபாய் வீதம் நிவாரணத் தொகை வழங்கிட வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது. மேலும் இறந்த விவசாயிகளின் குடும்பங்களில் தலா ஒருவருக்கு அரசுப் பணி வழங்கிட வேண்டுமெனவும் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் இந்த அரசின் சார்பில் நீதி மன்றத்திலே தாக்கல் செய்த பதிலிலேயே விவசாயிகள் யாரும் தற்கொலை செய்து கொள்ளவில்லை என்று கூறி, தற்போது அதைத் திருத்திக் கொண்டு, ஒன்பது விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு இறந்ததை ஒப்புக்கொண்டு, ஆனாலும் அதற்கு பயிர் இழப்பு காரணமில்லை என்று பூசிமெழுகிட முயன்றிருக்கிறார்கள். இது கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதைப் போலத்தான் உள்ளது. அதிலே இறந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு தலா 3 லட்சம் ரூபாய்

என்பது மிகவும் குறைவான தொகையாகும். அந்தத் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்றும், தற்கொலை செய்து கொண்டு இறந்த அனைத்து விவசாயிகளின் குடும்பங்களுக்கும் நிவாரணத் தொகை வழங்க வேண்டு மென்றும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசுப்பணி வழங்கிட வேண்டுமென்றும் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

எப்படியோ, வரப்போகிறது, வரப்போகிறது என்று விவசாயிகள் எல்லாம் மிக ஆவலோடு பல மாதங்களாக எதிர்பார்த்திருந்த நிலையில் – மிகவும் தாமதம் செய்யப்பட்டு வந்துள்ள அறிவிப்பும் கண்துடைப்பாக இருக்கிறதே தவிர, விவசாயிகளின் கண்ணீரைத் துடைத்துக் கவலையைப் போக்கக் கூடிய வகையிலே, இல்லை என்பதுதான் உண்மை! எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களாகிவிட்டன! இது கவலை போக்கும் அறிவிப்பா? வெறும் கண்துடைப்பா?

★★★

# மின் உற்பத்தி வளர்ச்சி - அன்றும், இன்றும்!

**உடன்பிறப்பே,**

ஆளுநர் உரைக்குப் பதிலளித்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மின் உற்பத்தி பற்றி அதிகாரிகள் தயாரித்துக் கொடுத்த நீண்ட விளக்கத்தைப் பேரவையிலே படித்திருக்கிறார். 2001 முதல் 2006 வரை நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியில், 500 மெகாவாட் மின் திறன் கொண்ட அனல் மின்நிலையத்தை வடசென்னையில் அமைக்கவும்; தேசிய அனல் மின் கழகத்துடன் இணைந்து 1000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையங்களை வல்லூரில் அமைக்க வும்; நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் இணைந்து 1000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையங்களை தூத்துக்குடியில் அமைக்கவும்; 500 மெகாவாட் திறன் கொண்ட குந்தா நீரேற்று மின் நிலையத்தை அமைக்கவும்; ராமநாதபுரம் மாவட்டம் வழுதூரில் 95 மெகாவாட் திறன் கொண்ட எரிவாயு சுழலி மின் நிலையத்தை அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும்; ஆனால் இந்த மின் திட்டங் களை 2006 முதல் 2011 ஆம் ஆண்டு

வரை நடைபெற்ற தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றாததுதான் தற்போது நிலவும் மின் பற்றாக்குறைக்குக் காரணம் என்றும் சொல்லியிருக்கிறார்.

இதில் வடசென்னை அனல் மின் நிலையம் 2ஆம் நிலைக்கு 26.6.2001இல் 1ஆவது அலகு மூலமாக ரூபாய் 2475 கோடி மதிப்பீட்டில் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க அரசாணை பிறப்பித்திருந்தாலும், அ.தி.மு.க. ஆட்சியை விட்டு இறங்குகின்ற வரை ஐந்தாண்டு காலத்தில் அந்த மின்திட்டம் தொடர்பாக எதுவும் நடைபெறவில்லை. ஆனால் தி.மு.கழக ஆட்சியிலேதான் 18.2.2008 அன்று முதல் அதற்கான பணிகள் பி.எச்.இ.எல் நிறுவனத்தாருடன் பேசி துரிதமாகச் செயல்படுத்தப்பட்டது. ஆனால் முதலமைச்சர் பேரவையில் அவரது ஆட்சியில் கிடப்பில் இத்திட்டம் போடப்பட்டதை அப்படியே மறைத்துள்ளார்.

வடசென்னை அனல் மின்நிலையம் நிலை 2ன் மூலமாக ரூபாய் 2,175 கோடி மதிப்பீட்டில் 2வது அலகு அமைக்க 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க கழக ஆட்சியிலேதான் 14.7.2008ல் அரசாணை பிறப்பிக்கப்பட்டு பணிகள் நடை பெறத் தொடங்கின.

2.5.2007ல் மேட்டூர் அனல் மின் நிலையம் நிலை3ன் மூலமாக 3,100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க கழக ஆட்சியிலேதான்

அரசாணை பிறப்பிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தன. இத்திட்டம்தான் தற்போது மின் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

12.7.2002ல் சென்னையில் தேசிய அனல் மின் கழகத்துடன் தமிழ்நாடு மின்சார வாரியம் புரிந்துணர்வு ஒப்பந்தம் (எம்.ஓ.யூ) 1000 மெகா வாட்டிற்குச் செய்யப் பட்டிருந்தது. இதைத்தான் முதலமைச்சர் தனது ஆட்சியில் தொடங்கப்பட்டது என்று சொல்கிறார். ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்தம் அ.தி.மு.க. ஆட்சியிலே போடப்பட்டதே தவிர, அதனைத் தொடர்ந்து எந்தப் பணியும் நடைபெறவில்லை. தி.மு. கழக ஆட்சியிலேதான், இதனை 1500 மெகாவாட் என்ற அளவிற்கு உயர்த்தி 8000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வல்லூரில் அமைத்திட 13.8.2007 முதல் பி.எச்.இ.எல் நிறுவனத் தாரால் விரைவாக பணிகள் செயல்படுத்தப்பட்டன.

19.6.2003ல் தூத்துக்குடியில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் புரிந்துணர்வு ஒப்பந்தம் (எம்.ஓ.யூ.) செய்யப்பட்டிருந்தாலும் அ.தி.மு.க. ஆட்சியில் எந்தப் பணியும் நடைபெறவில்லை. தி.மு.கழக ஆட்சி யிலேதான் 28.1.2009 முதல் 4909 கோடி ரூபாய்ச் செலவில் 1000 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க வேண்டி பி.எச்.இ.எல் நிறுவனத்தாரால் பணிகள் விரைவாகச் செயல்படுத்தப்பட்டன.

14.12.2009ல் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளை நவீனமயமாக்குதல் மூலம் 1126 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 183 மெகாவாட் இணை மின்சாரம் தயாரிக்க ஆணை பிறப்பிக்கப் பட்டதும் தி.மு. கழக ஆட்சியிலேதான்.

27.3.2002ல் அ.தி.மு.க. ஆட்சியில் பவானி கட்டளை தடுப்பணை புனல் மின் திட்டம்–3 என்ற திட்டம் 396 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 30 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க அரசாணை பிறப்பித் திருந்தாலும்; அதற்கான பணிகள் தி.மு. கழக ஆட்சியிலேதான் விரைவாகச் செயல்படுத்தப்பட்டன.

26.10.2007ல் உடன்குடியில் பாரத மிகு மின் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் கூட்டு முயற்சியில் 8700 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் (எம்.ஓ.யூ) செய்யப்பட்டது. ஏற்கனவே கழக ஆட்சிக் காலத்திலேயே இந்தத் திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டது. இதன் உற்பத்தி 2013ம் ஆண்டு, ஜனவரி மாதத்தில், 800 மெகாவாட் 1வது அலகு மூலமாகவும், மற்றொரு 800 மெகா வாட் 2வது அலகு மூலமாகவும், ஜூலை மாதத்தில் தொடங்க உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஆனால் 2011இல் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தொய்வு ஏற்பட்டது.

தற்போது தமிழக அரசே இந்தத் திட்டத்தை தாங்களே நிறைவேற்றப் போவதாக அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். இதுவும் அறிவிப்போடு இல்லாமல் உண்மையிலேயே தொடங்கினால் நல்லதுதான்.

8.12.2006ல் எண்ணூர் அனல் மின் நிலையம் விரிவாக்கம் மூலமாக 3,136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 600 மெகா வாட் மின்சாரம் தயாரிக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன. இதன் உற்பத்தி 2013ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் தொடங்க உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஆனால் 2011இல் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு இந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டுள்ளது.

5.1.2009ல் எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் (SEZ) அனல் மின் நிலையம் (காட்டுப்பள்ளி) மூலமாக 9613 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க ஆணை பிறப்பிக்கப் பட்டு, ஆரம்பக்கட்டப் பணிகள் நடைபெற்றுவந்தன. இந்தத் திட்டம் தற்போது அ.தி.மு.க. ஆட்சியில் அக்கறையுடன் துரிதமாக நடைபெறவில்லை.

இந்த உற்பத்தித் திட்டங்கள் பற்றியெல்லாம் மின்வாரியத்தில் நீண்ட காலம் பணியாற்றி ஓய்வு பெற்று விட்டாலும், மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுச் செயலாளரும், பேரவையின் பொருளாளருமான

தம்பி சிங்கார. ரத்தினசபாபதி விரிவாக ஏற்கனவே தொலைக் காட்சிகளில் மக்களுக்கு விளக்கியிருக்கிறார்.

அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கிய மின் திட்டங்களின் மீது தி.மு. கழக ஆட்சியில், எதுவும் செய்யவில்லை என்று ஜெயலலிதா தனது பதிலில், முதல் பத்தியில் கூறிவிட்டு, அடுத்த பத்தியில், "2005ஆம் ஆண்டு எனது ஆட்சிக் காலத்தில் ஒப்புதல் வழங்கப்பட்ட, வடசென்னை அனல் மின் நிலையத் திட்டத்தில் 50 விழுக்காட்டிற்கும் குறைவான பணிகளே மேற்கொள்ளப் பட்டிருந்தன" என்று சொல்லியிருக்கிறார். ஆகவே 50 சதவிகிதப் பணிகள் கழக ஆட்சியில் நிறைவேற்றப் பட்டன என்று அவரே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அவ்வாறு கழக ஆட்சியில் அந்தத் திட்டத்தின் மீது காட்டிய அக்கறையினால்தான், 600 மெகாவாட் மின்சாரம் இந்த ஆண்டு ஏப்ரல் முதல் கிடைக்கவுள்ளது. அதுபோலவே கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட வடசென்னை அனல் மின்நிலையத்தின் இரண்டாவது அலகின் மூலமாக மே மாதம் முதல் 600 மெகாவாட் மின்சாரம் கிடைக்கவுள்ளது.

கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட 600 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டப் பணி கள் மூலம் 608 மெகாவாட் மின்சாரம் கிடைக்கிறது. இத்திட்டம் பற்றி பேரவையில் முதலமைச்சர் மகிழ்ச்சியுடன் கூறிய

மறுநாளே இன்றையதினம் மேட்டூர் அனல் மின் நிலைய புதிய யூனிட்டில் திடீர் பழுது என்றும், சோதனை ஓட்டம் நிறுத்தப்பட்டு விட்டதாகவும் செய்தி வந்துள்ளது.

வல்லூர் அனல் மின் திட்டப் பணிகளும் கழக ஆட்சிக் காலத்தில்தான் விரைவாக நடைபெற்றன. முதல் அலகு உற்பத்தியையும் தொடங்கிவிட்டது. ஆனால் அதையும் ஜெயலலிதா இவரது முயற்சி யால் கிடைத்ததைப் போலப் பேரவையிலே தெரி வித்துள்ளார்.

ஒட்டுமொத்தமாக தி.மு. கழக ஆட்சியிலே பெரு முயற்சி எடுத்துச் செயல்படுத்தப்பட்ட திட்டங்களைத்தான் முதலமைச்சர் ஜெயலலிதா கடந்த 19 மாதங்களில் அவர் செய்ததைப் போலப் படித்துக் காட்டியிருக்கிறார். ஆனால் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட மற்ற திட்டங்களைப் போல இந்த மின் உற்பத்தித் திட்டங்களையும் முடக்கிப் போடாமல் அவர் இருந்ததே, தமிழகத்திற்குச் செய்த நன்மைதானே ? ஆனால் தமிழ்நாட்டு மக்கள் காட்டிய எதிர்ப்பின் காரணமாக அவர் இந்தத் திட்டங் களையெல்லாம் தொடர்ந்தாரே தவிர, இந்தத் திட்டங்கள் எல்லாம் செயல்பாட்டிற்கு வந்து, பிரச்சினை தீர வேண்டுமென்ற அக்கறையினால் அல்ல என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்றாகவே உணர்வார்கள்.

மேலும் ஜெயலலிதா தனது பதில் உரையில், அவரது ஆட்சிக் காலத்திலே, "2,500 மெகாவாட் அளவுக்கு மின் திட்டங்கள் துவக்கப்பட்டிருந்ததால், 7000 கோடி

ரூபாய் அளவுக்கு மின் திட்டங்களுக்குச் செலவழிக்க வேண்டிய நிலை தி.மு.க. அரசுக்கு ஏற்பட்டது" என்று சொல்லியிருக்கிறார். அதிலிருந்து அவரது ஆட்சிக் காலத்தில் 2,500 மெகாவாட் அளவுக்கு துவக்கப்பட்ட மின் திட்டங்களுக்காக, அவரது ஆட்சிக் காலத்தில் எதுவும் செலவழிக்கப்படவில்லை என்பதையும், கழக அரசிலேதான் அது ஜெயலலிதா ஆட்சியிலே தொடங்கப்பட்ட திட்டங்கள் ஆயிற்றே என்று கிடப்பிலே போட்டு விடாமல், 7,000 கோடி ரூபாய் அளவுக்குச் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் ஜெயலலிதா அம்மையாரே தன்னையும் அறியாமல் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

அம்மையார் அவர்கள் தனது பதிலில், "2001 முதல் 2006 வரையில் நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியில் மின் பற்றாக்குறை இல்லாத மாநிலமாக வைத்திருந்தோம், கழக ஆட்சியிலேதான் மின் பற்றாக்குறை வந்துவிட்டது" என்று சொல்கிறார். அப்போது அ.தி.மு.க. ஆட்சியிலே மின் பற்றாக்குறை இல்லாத மாநிலமாக தமிழகம் இருந்திடக் காரணம், 2001ஆம் ஆண்டுக்கு முன்பு, 1996 முதல் 2001ஆம் ஆண்டு வரை நடைபெற்ற தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் பேசின் பாலம் டீசல் எண்ணெய் மின் திட்டம், திருமூர்த்தி சிறு புனல் மின் திட்டம், முக்குருத்தி சிறு புனல் மின் திட்டம், சாமல்பட்டி டீசல் எண்ணெய் மின் திட்டம்,

திருமக்கோட்டை எரிவாயு சுழலி மின் திட்டம், பிள்ளைப் பெருமாள் நல்லூர் மின் திட்டம், சமயநல்லூர் டீசல் எண்ணெய் மின்திட்டம், ஆழியாறு சிறு புனல் மின் திட்டம், நெய்வேலி ஜீரோ யூனிட் மின் திட்டம், வழுதூர் எரிவாயு மின் திட்டம், பெருஞ்சாணி சிறு புனல் மின் திட்டம் என்ற இந்த 11 திட்டங்களின் மூலம் 1200 மெகாவாட் மின் உற்பத்திக்கு வழிவகை செய்ததால் தானே தவிர வேறல்ல. எனவே மின் வாரியத்தின் வளர்ச்சிக்குத் தி.மு.கழக ஆட்சிதான் வழி வகுத்தது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இறுதியாக ஒரு விவரம். ஜெயலலிதா தனது ஒவ்வொரு அறிக்கையிலும் தமிழக அரசுக்கு ஏராளமான கடன்களை நான் வாங்கி வைத்து விட்டதைப் போலத் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார். இதற்குப் பல முறை விளக்கமளிக்கப்பட்டும்கூட அதையே கூறி வருகிறார். 2006ஆம் ஆண்டு மே திங்களில்தான் தி.மு.கழகம் ஐந்தாவது முறையாக ஆட்சிக்கு வந்தது. அதற்கு முன்பே, 31.3.2006 அன்றே, அதாவது ஜெயலலிதா ஆட்சிபுரிந்த ஐந்தாண்டு காலத்திற்குப் பின்பு, தமிழக அரசின் மொத்தக் கடன் பொறுப்பு 57 ஆயிரத்து 457 கோடி ரூபாயாக இருந்தது. அதுபோலவேதான் மின் வாரியத்திலும் 2005–2006ஆம் ஆண்டில் 5000 கோடி ரூபாய் அளவிற்கு கடன் சுமையை வைத்து விட்டுத் தான் ஜெயலலிதா ஆட்சியை விட்டு இறங்கினார். இதைப்பற்றி நாங்கள்

பொறுப்புக்கு வந்தவுடன், ''அய்யோ, ஜெயலலிதா தமிழக அரசின் தலையில் 57 ஆயிரம் கோடி கடன் சுமையை ஏற்றி வைத்து விட்டுப்போய் விட்டார், மின் வாரியத்திலே 5000 கோடி ரூபாய் நஷ்டம்'' என்றெல்லாம் அறிக்கைக்கு மேல் அறிக்கை வெளியிட்டு யாரையும் குறை சொல்லிக் கொண்டிருக்கவுமில்லை. பிறர் மீது பழி சுமத்தித் தப்பித்துக் கொள்ள எத்தனித்ததுமில்லை. அரசு என்றால் கடன் வாங்கத்தான் நேரிடும். அதுவும் இந்தியா போன்ற வளரும் நாடுகளில் மக்களுக்குத் தேவையான நலத்திட்டங்களை நிறைவேற்றிட வேண்டுமென்றால் கடன் வாங்கினால்தான் நிறைவேற்ற முடியும். இவற்றைப் பற்றியெல்லாம் ஜெயலலிதா அவரது பாணியில் புழுதிவாரித் தூற்றுவதும், நாம் ஒவ்வொன்றிற்கும் உண்மை விளக்கம் அளிப்பதும், அதற்குப் பிறகும் ஏற்கனவே சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லி, அனைவரையும் குழப்பித் திசை திருப்புவதும் ஜெயலலிதாவின் வாடிக்கையாகிவிட்டது என்பதை; பச்சைப் பாம்புக்கும் பச்சைக் கொடிக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொண்டுள்ள தமிழ் மக்கள் இதையும் அறிந்திருப்பார்கள் என்ற போதிலும், மீண்டும் விளக்கம் தர வேண்டியது என்னுடைய கடமை என்பதால்தான் இந்தக் கடிதம்.

**"முரசொலி"** **அன்புள்ள,**

**11–2–2013.** **மு.க.**

# முறையான நடவடிக்கை எடுத்தது; நானா? அவரா?

**உடன்பிறப்பே,**

ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு 8–2–2013 அன்று பதிலளித்த முதலமைச்சர் ஜெயலலிதா படித்த டெல்டா மாவட்ட விவசாயி களுக்கான நிவாரணம், ஈழத்தமிழர் பிரச்சினை, மின் உற்பத்தி போன்றவைகளுக்கு நான் ஏற்கனவே விரிவாக விளக்கமளித்துள்ளேன். அவர் உரையில் எஞ்சிய பகுதி, காவேரி நதி நீர்ப் பிரச்சினை பற்றியதுதான்! காவேரி நதி நீர் பற்றி பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா, அவருடைய கடந்த 19 மாத கால ஆட்சியில் கர்நாடகாவிலிருந்து தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையான நீரினைப் பெற்றுக் கொடுக்க இயலாத நிலை பற்றி விளக்கம் அளிப்பதற்குப் பதிலாக, வழக்கம் போல் தேவையில்லாமல் என்னைப் பற்றி அடுக்கடுக்காக குற்றச்சாட்டுகளைக் கூறி; தான் தப்பித்துக் கொள்ள முயன்றிருக்கிறார். காவேரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடுவதற்கும், காவேரியிலிருந்து தண்ணீரைப் பெறுவதற்கும் கருணாநிதி

எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று ஜெயலலிதா சொல்லியிருக்கிறார். இவர் இந்தக் குற்றச்சாட்டினை அவ்வப்போது சொல்வதும், ஒவ்வொரு முறையும் அதற்கு நான் விளக்கமளிப்பதும் தொடர்கதையாகவே இருந்து வருகிறது.

காவேரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையை தனது இடைவிடா முயற்சிகளால் பெற்றுக்கொண்டு வந்ததைப்போல ஜெயலலிதா பேரவையிலே கூறி யிருக்கிறார். **காவேரி நடுவர் மன்றம் என்ற ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று முதன் முதலாக தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்த போதுதான் 17–2–1970 அன்றே மத்திய அரசுக்குக் கடிதமே எழுதபட்டது. நடுவர் மன்றம் அமைத்திட வேண்டும் என்று சட்டமன்றத்தில் தி.மு. கழக ஆட்சியிலேதான் 8–7–1971 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

தி.மு.கழகம் ஆட்சியிலே இருந்த போதுதான், 27–7–1989 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்று, நடுவர் மன்றம் அமைக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. ஆனால் அந்தக் கூட்டத்தில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. தவிர அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டனர். **நடுவர் மன்றம் அமைத்திட வேண்டும்**

**என்பதில் ஜெயலலிதாவுக்கு எந்த அளவுக்கு ஆர்வம் இருந்தது என்பதை, அனைத்துக் கட்சிக் கூட்டத்தை அ.தி.மு.க. புறக்கணித்ததிலிருந்தே புரிந்து கொள்ளலாம்.**

**2–12–1989** அன்று திரு. வி.பி. சிங் அவர்கள் பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, நடுவர் மன்றம் அமைக்கக் கோரி கடிதம் எழுதினேன். பேரவையிலே அதைப் பற்றித் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றி அனுப்புமாறு வி.பி.சிங் அவர்கள் என்னிடம் தெரிவித்ததின் பேரில், **24–4–1990** அன்று நடுவர் மன்றம் தேவை என்று பேரவையில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தின் விளைவாகத் தான் **2–6–1990** அன்று நடுவர் மன்றம் அதுவும் தி.மு.கழக ஆட்சியிலே, நான் முதலமைச்சராக இருந்தபோது தான் அமைந்தது.

**28–7–1990**இல் கழக ஆட்சியில்தான் இடைக் காலத் தீர்ப்பினைக்கோரி நடுவர் மன்றத்தில் மனு செய்தோம். **5–1–1991** அன்று இடைக்காலத் தீர்ப்பு வழங்கிட தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று நடுவர் மன்றம் கூறியது. நடுவர் மன்றத்துக்கு அதிகாரம் உண்டா இல்லையா என்று தீர்ப்பளியுங்கள் என்று உச்ச நீதி மன்றத்தில் **10–1–1991** அன்று தி.மு.கழக ஆட்சியிலே வழக்கு தொடர்ந்து, **26–4–1991** அன்று உச்சநீதி மன்றம் தீர்ப்பு "அதிகாரம் உண்டு" என்று வழங்கியது. கழக

ஆட்சியில் கோரிப் பெற்ற தீர்ப்பின் காரணமாகவே 25–6–1991இல் நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பினை அளித்தது. இதற்கிடையில்தான் 31–1–1991 அன்று கழக ஆட்சி கலைக்கப்பட்டு, ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தார். ஆனால் அவரது ஆட்சிக் காலத்தில் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு மத்திய அரசிதழில் வெளிவந்த போதிலும், எந்தவிதமான விளைவுகளும் ஏற்படவில்லை. 1991 முதல் 1996 வரை ஜெயலலிதா ஆட்சியில் இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்ற முடியவில்லை.

1996ஆம் ஆண்டு மீண்டும் தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, நடுவர் மன்றத்தின் ஆணையைச் செயல்படுத்துவதில் தாமதத்தைத் தவிர்க்கும் வண்ணம், திட்டத்தை இறுதி செய்து அரசிதழில் வெளியிட வேண்டுமென்று 9–7–1997, 23–7–1997, 29–9–1997, 1–11–1997, 6–11–1997 ஆகிய நாட்களில் பிரதமருக்கு நான் எழுதிய கடிதங்களிலும், 27–7–1997 மற்றும் 29–9–1997 ஆகிய நாட்களில் பிரதமரை நேரில் சந்தித்தும் கேட்டுக் கொண்டேன். மேலும் 10–11–1997 அன்று மத்திய அரசுக்கு அப்படியொரு ஆணை பிறப்பிக்க உச்ச நீதி மன்றத்தில் முறையீட்டு மனு ஒன்றும் தமிழக அரசின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டது. மீண்டும் 28–3–1998, 6–4–1998 மற்றும் 31–5–1998 ஆகிய நாட்களில் பிரதமருக்குக் கடிதம் மூலமாகவும், 7–4–1998 அன்று நேரிலும் சந்தித்து,

வரைவுத் திட்டத்தை இறுதி செய்து அரசிதழில் வெளியிடக் கேட்டுக் கொண்டேன்.

**21–7–1998 அன்று உச்ச நீதிமன்றம், "பிரச்சினையை சுமூகமாகத் தீர்க்கப் போவதாக மத்திய அரசு உறுதியளித்து, 15 மாதமாகிறது, இன்னமும் இணக்கமான திட்டம் உருவாக்கப்படவில்லை, இந்த நிலை நீடித்துக் கொண்டே போவதை அனுமதிக்க முடியாது" என்று தெரிவித்தது.**

28–7–1998 அன்று பிரதமர் வாஜ்பாய் அவர்கள் 6–8–1998 அன்று பிரதமர் அலுவலகத்தில் காவிரி பிரச்சினை பற்றி பேசுவதற்காக ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தில் என்னைக் கலந்து கொள்ள கடிதம் எழுதியிருந்தார். அதிலே கலந்து கொள்வது பற்றி 3–8–1998 அன்று தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி, பிரதமர் கூட்டியிருந்த கூட்டத்தில் நான் கலந்து கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால் ஜெயலலிதா அந்தக் கூட்டத்திற்கு நான் செல்லக் கூடாது என்று அறிக்கை விடுத்தார்.

பிரதமர் வாஜ்பாய் அவர்கள் இரண்டு நாட்கள் தொடர்ந்து நடத்திய அந்தக் கூட்டத்தின் இறுதியில்தான், 7–8–1998இல் தி.மு.கழக ஆட்சியில் இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்கான ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த

ஒப்பந்தத்தின்படி இடைக்கால ஆணையில் கூறப்பட்ட 205 டி.எம்.சி. தண்ணீர் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், பிரதமர் தலைமையில் காவிரி பாயும் நான்கு மாநில முதல்வர்கள் அடங்கிய காவிரி ஆணையம் அமைக்கப்படும் என்றும் முடிவாயிற்று. அந்த ஒப்பந்தத்தை சி. சுப்பிர மணியம், ஜி.கே. மூப்பனார், சங்கரய்யா, ஆர். நல்லகண்ணு, அப்துல் சமது, எம்.ஏ. லத்தீப், குமரிஅனந்தன், திண்டிவனம் ராமமூர்த்தி, ஆர்.எம்.வீரப்பன், ஜி.ஏ.வடிவேலு, இல.கணேசன், எஸ். திருநாவுக்கரசு, பேராயர் எஸ்றா சற்குணம் போன்ற தலைவர்களும் மற்றும் ஏடுகள் இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி, விடுதலை, தீக்கதிர், தி டைம்ஸ் ஆப் இந்தியா, தி இந்துஸ்தான் டைம்ஸ் ஆகிய நாளேடுகளும் கல்கி, குமுதம், சாவி, துக்ளக், ஆனந்த விகடன், குங்குமம், ஆகிய இதழ்களும் பாராட்டின. இதுதான் உண்மையில் நடந்த வரலாறு.

உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டுமென்றால், "தி இந்துஸ்தான் டைம்ஸ்" ஏடு, "Karunanidhi Scores Diplomatic Victory" என்ற தலைப்பில், **"காவிரிப் பிரச்சினை பற்றிய பேச்சு வார்த்தையின் முடிவு தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி அவர்களுக்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய அரசியல் வெற்றியாகும். நடுவர் மன்றத்தின் இடைக் காலத் தீர்ப்பை அமல்படுத்த கர்நாடகம் ஒத்துக் கொண்டதே மிகப் பெரிய**

வெற்றியாகும். ஜூன் 1990 முதல், அதாவது நடுவர் மன்றம் 205 டி.எம்.சி. தண்ணீரைத் தமிழகத்திற்கு கர்நாடகம் வழங்க வேண்டுமென்று தீர்ப்பளித்த அந்த நாள் முதல், கர்நாடகத்தில் தொடர்ந்து இருந்து வந்த அரசுகள், இடைக் காலத் தீர்ப்பை ஒத்துக் கொள்ளவில்லை. கர்நாடகத்தை இடைக் காலத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளச் செய்து, நடுவர் மன்றம் தமிழகத் திற்கு வழங்கிட வேண்டிய தண்ணீரின் அளவு பற்றிய இறுதித் தீர்ப்பை வெளியிடும்போது 205 டி.எம்.சி. தண்ணீர் என்பது அடிப்படை அளவு கோலாக இருக்கும் என்பதையும் திரு. கருணாநிதி உறுதி செய்து கொண்டுள்ளார். அ.தி.மு.க. வும் அதன் தோழமைக் கட்சி களும் "கர்நாடகத்துடன் பேச்சு வார்த்தையே கூடாது" என்று எடுத்திருந்த அணுகுமுறையை திரு.கருணாநிதி வெற்றிகரமாக உடைத்தெறிந்து விட்டார். அதன் மூலம் பிரச்சினைகளை வழக்குகளின் மூலம் அல்லாது, பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்வது சிறந்தது என்பதையும் நிரூபித்துக் காட்டிவிட்டார். பேச்சு வார்த்தைக்குக் கதவடைக்க மறுத்ததன் மூலம், திரு.கருணாநிதி தன்னுடைய மிகப் பெரிய அரசியல் முதிர்ச்சியை வெளிக்காட்டியுள்ளார். ஆணையத்திற்குப் பிரதமரைத் தலைவராக அமைத்துக் கொண்டதன் மூலம், மத்திய அரசில் நடுவர் மன்றத் தீர்ப்பினை கர்நாடகம் அமல்படுத்துவதை உறுதி செய்து கொள்வதற்கான ஒரு உத்தரவாதத்தை ஏற்படுத்திக் கொண்டார்" என்று எழுதியது.

அது மாத்திரமல்ல; வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஒப்பந்தத்தை அனைத்துக் கட்சித் தலைவர்களும், ஏடுகளும் பாராட்டியபோது ஜெயலலிதா அதனை வரவேற்றாரா என்றால் இல்லை. மாறாக அந்தத் தீர்வினை நிராகரிக்கிறோம் என்றும், அதனை ஏற்க மாட்டோம் என்றும் கூறினார்.

அந்த முடிவு காண வழி வகுத்தவர், பா.ஜ.க. பிரதமராக இருந்த திரு.வாஜ்பாய். அப்போது அவர் அ.தி.மு.க.வுடன் கூட்டணியில் இருந்தவர். இருந்தாலும், அந்தக் கூட்டணியிலே இல்லாத தி.மு.க.வின் தலைவனான என்னை அழைத்து சுமூக முடிவு கண்டார். ஆனால் மத்திய அரசில் இடம் பெற்ற அ.தி.மு.க. தலைவி அந்த ஒப்பந்தம் பற்றி பத்திரிகையாளர்களிடம் என்ன கூறினார் தெரியுமா?

**"காவிரி பிரச்சினையில் வாஜ்பாய், கருணாநிதியின் தந்திரத்திற்கு ஆளாகி விட்டார். இரண்டு பேரும் சேர்ந்து செய்து கொண்டிருக்கின்ற உடன்பாட்டை நாங்கள் நிராகரிக்கிறோம்" என்றார்.**

மக்கள் கடந்த கால நிகழ்வுகளை மறந்திருப்பார்கள் என்று எப்போதும் மனப்பால் குடித்து; தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளும் ஜெயலலிதா, இத்தனையையும் இப்போது மறைத்து விட்டு, அவருடைய இடைவிடா முயற்சிகளால் தான் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பிலே முடிவு காணப்பட்டதைப் போலவும்,

காவேரி நதிநீர் ஆணையம், மற்றும் காவேரி கண்காணிப்புக் குழு போன்றவை அமைக்கப்பட்டன என்பதைப் போலவும் பேரவையிலே தன்னைத்தானே தட்டிக் கொடுத்துப் பாராட்டிக் கொண்டுள்ளார்.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு தி.மு.கழக ஆட்சியிலேதான் **5–2–2007** அன்று வெளியிடப் பட்டது. இந்தத் தீர்ப்பினை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த எம். கிருஷ்ணசாமி, திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர் கி.வீரமணி, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் என். வரதராசன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன், காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் ரெங்கநாதன், உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பில் கே.எஸ். நடராசன் ஆகியோர் அப்போது வரவேற்று அறிக்கை கொடுத்தனர்.

ஆனால் அ.தி.மு.க.வின் சார்பில் ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் இறுதித் தீர்ப்பை "ஏற்க முடியாத தீர்ப்பு" என்றும், "கருணாநிதியால் காவிரி பிரச்சினையில் நடுவர் மன்றத்தின் மூலம் தமிழகத்திற்கு நியாயமாக கிடைக்க வேண்டிய தீர்ப்பை முழுமையாகப் பெற்றுத்தர முடியவில்லை. இந்த இறுதித் தீர்ப்பு தமிழகத்திற்குப்

பாதகமாக வந்துள்ளது. இதற்குத் தார்மீகப் பொறுப்பேற்று தி.மு.க. அரசு ராஜினாமா செய்ய வேண்டும்" என்றும் எப்போதும் போல எனது ராஜினாமாவை வலியுறுத்தி அறிக்கை விடுத்தார்.

அந்த ஜெயலலிதாதான், இப்போது நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட தான்தான் பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்கிறார். அதற்காக தி.மு.க. எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை என்கிறார். பிரதமரிடம் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசிதழில் வெளியிட வேண்டுமென்று கோரிக்கை வைக்கவில்லை; மாறாக அதனைத் தடுத்தார்கள் என்கிற அளவிற்குக் குற்றஞ்சாட்டி, இந்திய நாட்டின் பிரதமர் அலுவலகத்தையே கொச்சைப்படுத்துகிறார்.

காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வந்த போதுகூட, தி.மு. கழக அரசு அந்த நிலையிலும், இந்த இறுதித் தீர்ப்பு குறித்து ஜெயலலிதாவைப் போலத் தன்னிச்சையாக முடிவெடுக்க விரும்பாமல், **19–2–2007** அன்றும் **15–4–2007** அன்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டித்தான் முடிவெடுத்தது. ஆனால் தற்போது ஜனநாயக மரபுகளைப் போற்றக் கூடிய வகையில், அவ்வாறு எந்த அனைத்துக் கட்சிக் கூட்டமும் கூட்டப்படாமல், தமிழக முதலமைச்சர்;

தான் நினைத்ததே முடிவு என்பதைப் போல செயல்பட்டு வருகிறார்.

எனவே ஜெயலலிதா காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பையும் ஏற்கவில்லை, இறுதித் தீர்ப்பையும் ஏற்கவில்லை என்பதுதான் உண்மை. காவிரி நதி நீர் ஆணையத்தையாவது ஏற்றுக் கொண்டாரா ?

காவிரி நதி நீர் ஆணையம் (Cauvery Authority) அமைக்கப்பட்டு, 11–8–1998 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. **21–8–1998 அன்று ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையில், "உத்தரவிடுவதற்கும், செயல்படுத்துவதற்கும் போதிய அதிகாரம் உள்ள அமைப்புக்குத்தான் ஆணையம் என்று பெயர். ஆனால் பிரதமர் தலைமையிலான ஆணையத்துக்கு காவிரி தொடர்பாக உத்தரவிடுவதற்கும், செயல்படுத்துவதற்கும் எந்த அதிகாரமும் இல்லை. காவிரிப் பிரச்சினையைத் தீர்க்க இயலாத, எந்த முடிவும் எடுக்க விடாமல் தடுக்கிற விவாத அமைப்பாகத்தான் இப்புதிய ஆணையம் அமைக்கப் பட்டுள்ளது. இதனால் கர்நாடகத்துக்குச் சிறிதும் பாதிப்பில்லை; பாதிக்கப்படப்போவது தமிழகம்தான்" என்று ஆத்திர அவசரத்தோடு சொன்னார்.**

2–4–2002 அன்று சட்டப் பேரவையில் முதல்வர் ஜெயலலிதா, "செயல்படாத ஆணையம் காவேரி ஆணையம்", "பல் இல்லாத ஆணையம்"; அந்த

ஆணையத்தை ஏற்காமல் நாங்கள் பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வெளியேறினோம்,” என்று சொன்னார்.

**21–6–2002** அன்று முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் “எவ்வித அதிகாரமும் இல்லாமல், காவிரி நடுவர்மன்றத் தீர்ப்பைத் திறம்படச் செயல்படுத்த இயலாத நிலையில் காவிரி நதி ஆணையம் உள்ளது. எனவே இந்த ஆணையத்தின் கூட்டங்களில் இனிமேல் தமிழ்நாடு கலந்து கொள்ளாது” என்று விளைவுகளைப் பற்றி விரிவாக எண்ணிப் பார்க்காமல் கொண்டதே கோலம் என்ற பாணியில் முடிவெடுத்து அறிவித்தார்.

அ.தி.மு.க. அரசின் இந்த அமைச்சரவை முடிவினைப் பற்றி என்னிடம் கருத்து கேட்டபோது, “ஆணையத்தைப் புறக்கணிக்க ஜெயலலிதா அரசு எடுத்த முடிவு; விவேகமானதல்ல; குறுவை நெல் பயிரிடுவதற்குத் தேவையான தண்ணீரைப் பெறுவதற்கு மத்திய அரசின் தலையீட்டையும் உதவியையும் பெற அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைத்துச் செயல்பட வேண்டும்; தி.மு.க. ஆட்சியில் எடுக்கப்பட்ட முடிவுகளை எல்லாம் மாற்றும் போக்குதான் அ.தி.மு.க. அரசில் மேலோங்கி நிற்கிறது. காவிரிப் பாசனப் பகுதிக்கு; உரிய நேரத்தில்

நீர் கிடைக்க முயற்சி மேற்கொண்டது தி.மு.க. ஆட்சிக் காலம். ஆணையக் கூட்டத்துக்குச் செல்லமாட்டேன் என்பது அதிமுக ஆட்சிக் காலம்" என்று நான் கூறினேன்.

காவேரி ஆணையத்தைப் புறக்கணிப்போம் என்று 2002ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் தெரிவித்தவர்தான் ஜெயலலிதா. அதற்கடுத்த நாள் "அழைத்தால் பார்க்கலாம்" என்றார். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நான் ஆட்சியிலே இல்லாத நேரத்திலேகூட,5–7–2002 அன்று பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கு காவிரி நதி நீர் ஆணையத்தை உடனே கூட்ட வேண்டுமென்று கோரி கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில், "தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம் திறந்துவிட வேண்டும் என்ற காவிரி நடுவர் மன்ற உத்தரவைக் கண்காணிப்பதற்காகவே தங்களது (பிரதமரது) தலைமையில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களின் முதல் அமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்டு காவிரி நதிநீர் ஆணையம் அமைக்கப்பட்டது. ஆனால், நடுவர் மன்ற ஆணையின்படி தண்ணீர் திறந்து விடப்படாததால், காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் மிகுந்த துயருக் குள்ளாகியுள்ளனர். காவிரிப் பாசன விவசாயிகளின் இந்தத் துயரத்தை உணர்ந்து, பிரச்சினை ஓரளவேனும்

குறைக்கப்பட தமிழகத்திற்கு 3 டி.எம்.சி. தண்ணீரைத் திறந்து விடும்படி கர்நாடக முதலமைச்சரை தாங்கள் கேட்டுக்கொண்டதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், தாங்கள் விடுத்த அந்தக் கோரிக்கையை கர்நாடக அரசு ஏற்க மறுத்துள்ளது. எனவே, காவிரி நதி நீர் ஆணையத்தின் கூட்டத்தை விரைவில் கூட்டி நடுவர் மன்ற உத்தரவை உடனடியாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தங்களை வேண்டுகிறேன்" என்று எழுதியிருந்தேன்.

5–7–2002 அன்று பிரதமருக்கு காவேரி ஆணையத்தைக் கூட்ட வேண்டுமென்று நான் எழுதிய கடிதத்திற்கு 10–7–2002 அன்று பிரதமர் எழுதிய பதில் கடிதத்தில் அதைப்பற்றிக் கவனிப்பதாகக் கூறியிருந்தார். அவ்வாறே காவிரி நதி நீர் ஆணையம் கூட்டப்பட்டது.

டெல்லியில் பிரதமர் கலந்து கொண்ட காவேரி ஆணையக் கூட்டத்தில் முதலமைச்சர் ஜெய லலிதா கலந்து கொண்டபோதே 27–8–2002 அன்று அங்கே சுமூகமாகப் பேசித் தண்ணீரைப் பெறுவதற்கான வழிவகை காணாமல், அவருக்கே உள்ள முன்கோபம் காரணமாக பிரச்சினையின் அவசர முக்கியத்துவத்தை மறந்து, இடையிலே வெளி நடப்பு செய்வதாகக் கூறிவிட்டு, வெளியே வந்துவிட்டார்.

29–11–2002 அன்று மீண்டும் காவேரி ஆணையக் கூட்டம். கர்நாடக முதல் அமைச்சர் முதல்நாளே சென்றுவிட்டார். ஆனால் நம்முடைய முதல்அமைச்சர் ஜெயலலிதா கடைசி நிமிடம் வரை வருவதாகச் சொல்லி விட்டு, பிறகு டெல்லி பயணத்தையே ரத்து செய்துவிட்டார். யாருக்கு இழப்பு ? தமிழ்நாட்டு விவசாயிகளுக்குத்தான் !

இதற்கிடையில் **"பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான காவிரி நதிநீர் ஆணையம் மீது நம்பிக்கை இல்லை என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமருக்கு கடிதம் எழுதியது, கடுமையான ஆட்சேபத்துக்குரியது; அந்த அவதூறுக் கடிதத்தை நான்கு நாட்களுக்குள் திரும்பப் பெற வேண்டும்" என்று தமிழக அரசு வழக்கறிஞரிடம், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர். தமிழக அரசின் வழக்கறிஞரான திரு.கே.கே. வேணு கோபால், நீதிபதிகளிடம், "பிரதமர் மீதும், அவரது தலைமையில் செயல்படும் காவிரி நதிநீர் ஆணையத்தின் மீதும் தமிழகம் முழு நம்பிக்கை வைத்துள்ளது. காவிரி நதிநீர் ஆணையத்தின் மீது நம்பிக்கை தெரிவித்தும், பிரதமர் வாஜ் பாய்க்கு இதுதொடர்பாக எழுதிய கடிதத்தைத் திரும்பப் பெறுவதற்காகவும் மீண்டும் ஒரு கடிதத்தை வெகுவிரைவில் பிரதமர் வாஜ்பாய்க்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா எழுதி அனுப்புவார்"** என்றும் தெரிவித்தார்.

அதற்கிணங்க, 16–11–2002 அன்று பிரதமருக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா எழுதிய கடிதத்தில், “பிரதமர்மீது தனிப்பட்ட முறையில் தான் மிகுந்த மதிப்பு வைத்திருப்பதாகவும், ஏற்கனவே தான் சொன்ன அத்தனையையும் மறந்துவிட்டு காவேரி ஆணையத்தின் மீதும் நம்பிக்கை வைத்திருப்பதாகவும்” எழுதியிருந்தார்.

வரலாற்று ரீதியிலான இத்தனை உண்மை நிகழ்வுகளையும் யார் நினைவிலே வைத்துக் கொண்டிருக்கப் போகிறார்கள் என்ற நம்பிக்கையால்தான் முதலமைச்சர் ஜெயலலிதா காவிரிப் பிரச்சினையில் கருணாநிதி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றிலே மறைப்பதைப்போல, பேரவையில் முழங்கியிருக்கிறார்.

தமிழ்நாட்டு மக்களே! நடந்தவைகளை மனசாட்சித் தெளிவுடன் ஒளிவுமறைவில்லாமல் எழுதியிருக்கிறேன், நீங்களே கூறுங்கள்; காவிரிப் பிரச்சினையில் கருணாநிதி முறையாக நடவடிக்கை எடுத்தாரா ? இல்லையா ?

“முரசொலி” அன்புள்ள,

11–2–2013. மு.க.

# டெல்டா மாவட்டங்களைத் தவிர்த்த வறட்சியால் பாதிக்கப்பட்ட மற்ற மாவட்டங்களின் விவசாயிகளுக்கு நிவாரணம் உண்டா? இல்லையா?

**தலைவர் கலைஞர் அறிக்கை – 12.2.2013**

தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் 25 லட்சத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் சாகுபடி நடந்ததென புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஆனால் டெல்டா மாவட்டங்களில் 11.20 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்ட சம்பா சாகுபடி முற்றிலும் பாதிக்கப்பட்டு அதற்கு முன்னரே குறுவைச் சாகுபடியும் பொய்த்துப் போய் விட்டது. இந்த நிலையில் அ.தி.மு.க. அரசு பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணத்தை அறிவிக்காமல் ஒரு பகுதியினருக்கு மட்டும், அதாவது 50 சதவிகிதத்திற்கும் அதிகமாக மகசூல் பாதிக்கப் பட்டவர்களுக்கு மட்டும் – அதுவும் அவர்கள் பல மாதங்களாகக் கோரி பல்வேறு வகையான போராட்டங்களை நடத்திய பிறகும்கூட, அவர்களுக்கு திருப்தி அளிக்காத வகையில் நிவாரணத் தொகையை ஜெயலலிதா அறிவித்திருக்கிறார். ஏற்கனவே போராடிக் கொண்டிருந்த விவசாயிகள் இந்த நிவாரணம் முழுமையாக நிறைவளிக்கவில்லை என்பதால் மீண்டும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

சென்னையைத் தவிர்த்த மற்ற அனைத்து மாவட்டங்களும் தமிழகத்தில் வறட்சி பாதித்த மாவட்டங்கள் என்பதை அ.தி.மு.க. அரசு ஏற்கனவே ஏற்றுக்கொண்டு சட்டப் பேரவையிலேயே அறிவித்துள்ளது. ஆனால் டெல்டா விவசாயிகளுக்கு குறைந்த பட்ச நிவாரணத் தொகையாக ஏக்கருக்கு 13,692 ரூபாய் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததைப் போல, வறட்சியால் பாதிக்கப் பட்ட மற்ற அனைத்து மாவட்ட விவசாயிகளுக்கும் குறைந்தபட்ச நிவாரணத் தொகை என்ன என்பதை அரசு இதுவரை அறிவிக்கவில்லை.

வறட்சி ஏற்படும்; சாகுபடி பொய்த்துப் போகும் என்பதை முன்கூட்டியே அறிந்து வைத்திருந்தாலுங்கூட, அந்த வேளாண்துறை அதிகாரிகளின் அலட்சியம் காரணமாக மற்ற மாவட்டங்களில் குறிப்பாக மதுரை, சிவகங்கை, கன்னியாகுமரி, ராமனாதபுரம், விருதுநகர், கோவை, திருப்பூர் போன்ற மாவட்டங்களில் பயிர் காப்பீட்டுத் திட்டம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதால் அதனால் ஏற்படும் இழப்பீட்டுக்கு யார் பொறுப்பேற்பது?

டெல்டா விவசாயிகளுக்கு ஏற்கனவே 13,692 ரூபாய் ஏக்கர் ஒன்றுக்கு நிவாரணமாக அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த ரூபாயிலேகூட, பேரிடர் நிவாரணம் 5000 ரூபாய்; தேசியப் பயிர்க் காப்பீட்டின் மூலமாக 8,692 ரூபாய் சேர்த்துத் தான், 13,692 ரூபாய் இழப்பீடு வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தார்கள்.

அமைச்சர்கள் டெல்டா மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு வந்த பிறகு, இந்த 13,692 ரூபாயோடு மேலும் 1,308 ரூபாய் மட்டுமே கூடுதலாகச் சேர்த்து, ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் என்று முதல் அமைச்சர் மொத்தமாக அறிவித்திருக்கிறார்.

முதலமைச்சர் ஜெயலலிதா ஏற்கனவே சட்டப்பேரவையில் செய்த அறிவிப்பின் மூலமாக நிவாரணத்தைப் பொறுத்தவரை டெல்டா மாவட்டங்களின் விவசாயிகளிடையே ஏற்றத்தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. இப்போது வறட்சியால் பாதிக்கப்பட்ட மற்ற மாவட்டங்களின் விவசாயிகளுக்கு எந்த வகையான நிவாரணமும் அறிவிக்காததின் காரணமாக முன்னர் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வு மாநில அளவில் பெரிதும் விரிவடைந்துள்ளது. அதன் காரணமாக தமிழகத்திலே அனைத்து மாவட்டங்களிலும் உள்ள விவசாயிகள் பெரும் ஏமாற்றத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள். இந்த அசாதாரண நிலையிலிருந்து தமிழக விவசாயிகளை மீட்டெடுக்கும் நோக்கில் டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு முன்னர் தெரிவித்த நிவாரண அளவை அதிகரித்தும், மற்ற மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான நிவாரணத்தை மேலும் தாமதிக்காமல் முடிவு செய்தும் அறிவிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

***